களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

Vol. 6 No. 02, August 2026, p593-602 | Available online at: www.tamilmanam.in
Original Research Paper

வ.உ.சி. அவர்களின் "அகமே புறம்" உணர்தலும் உணர்த்தலும்

V.O.C.'s "Agame Puram" (As Within, So Without / The Interior is the Exterior) Realization and Impartation

திருமதி ச. கண்ணம்மாள்,

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது), திருச்சி - 620 002.

Mrs. S. Kannammal*,

Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,
(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.
***Email**: kannammalshanmugam86@gmail.com, ORCiD: 0009-0008-2955-0627*

Article history
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
Published: 25-08-2026
*Corresponding Author Email:
kannammalshanmugam86@gmail.com

Abstract: In all countries across the world, whoever is marginalized or sidelined across various spheres such as religion, race/ethnicity, language, economy, and education can be termed marginal people. In English, this is referred to as 'subaltern studies'. That is, anyone pushed from the center to the periphery can be included within the definition of marginal people. In this regard, transgender individuals, homosexuals, roadside workers, informal/casual workers, students, women, and children can all be brought under the definition of marginal people. The objective of this study is to focus on and depict the living conditions of people who struggle for their rights and to sustain their existence. Furthermore, this study explains the struggle of people from all walks of life striving to maintain their living conditions, their dignity and desire to break free from it, and their resistance.

Keywords: *Marginal people - Concepts of center and margin - Subaltern studies - Liberation of the marginalized - Those who fought for the liberation of the marginalized - Marginal people in Perumal Murugan's works.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

சுருக்கம் (Abstract)

தமிழர் பெருமையைத் தலைநிமிரச் செய்த சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழறிஞருமான வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் மொழிபெயர்ப்பு, படைப்பு, உரை, பதிப்பு எனும் நான்கு நிலைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றியவர். ஜேம்ஸ் ஆலனின் "Out from the Heart" என்னும் நூலை அவர் "அகமே புறம்" எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார் (சிதம்பரம் பிள்ளை). அகமும் புறமும் வேறல்ல, அகம் செம்மையானால் புறமும் செம்மையாகும் என்னும் கருத்தை மையமாகக் கொண்ட இந்நூலின் வெளியீட்டு வரலாற்றையும், அதில் இடம்பெறும் ஒழுக்கம், அறம், மனோநிலை சார்ந்த கருத்துக்களையும் ஒப்பாய்வு மற்றும் விளக்கமுறைத் திறனாய்வு முறையில் இக்கட்டுரை ஆராய்கின்றது. அடுத்தடுத்த பதிப்புகளில் பாயிரங்கள் நீக்கப்பட்டதால் நூல் வரலாற்றுச் செய்திகள் இழக்கப்படும் நிலையையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

திறவுச் சொற்கள் (Keywords)

அகமே புறம், ஒழுக்கம், உயர்தர வாழ்வு, மனோநிலை, செயல்கள், எண்ணங்கள்.

1. முன்னுரை

அற வழியில் பொருளீட்டி இன்பம் துய்த்து வீடுபேறு அடைவதற்குரிய ஆற்றுப்படுத்தலைச் செவ்வனே செய்து வருபவை இலக்கியங்கள் எனின் அது மிகையன்று. எண்ணரும் படைப்பாளர்கள் தோன்றி, தம் சிந்தனை வளத்தால் மொழியின் நிலைப்பாட்டிற்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளனர். அவ்வரிசையில் எஞ்ஞான்றும் வணங்கத்தக்கவராய், தமிழரின் பெருமையைத் தலை நிமிரச் செய்தவர் வ. உ. சி. அவர்கள். அவரின் மொழிபெயர்ப்பு நூல்களுள் ஒன்று "அகமே புறம்" (சிதம்பரம் பிள்ளை). அகமும் புறமும் மனித வாழ்வின் இரு கண்கள் எனப் போற்றி வரும் வேளையில் இரண்டும் வேறல்ல, அது உயிர்வளி போன்று ஒன்றுதான். ஆம், அகமே புறம். அகம் செம்மையானால் அனைத்தும் செம்மையாகும் என்ற கருத்தினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

2. ஆய்வு நோக்கம்

மேற்கத்திய கலாச்சார பரவலினால் நம் மண் மரபு சார்ந்த கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகள் தனித்தன்மையை இழந்து வருகின்றன. மெய்ஞானத்தையும் மெய்யியலையும் உலகுக்கு எடுத்துரைத்த தமிழரின் இயல்பும் இலக்கிய மரபும் மீண்டும் உணர்த்தப்பட வேண்டிய சூழலில், 'அகமே புறம்' நூலின் கருத்துக்கள் வலியுறுத்தப்பட வேண்டும் என்பதே இவ் ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

https://doi.org/10.63300/kijts06022026.55

3. திறனாய்வு முறை

இக்கட்டுரை ஒப்பாய்வு மற்றும் விளக்கமுறைத் திறனாய்வு முறையில் அமைந்துள்ளது. மூலநூலான 'அகமே புறம்' மற்றும் அதன் பல்வேறு பதிப்புகள், துணைநூல்கள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

4. தேசப் பணியும் தமிழ்ப் பணியும்

அரச நிந்தனைக் குற்றத்திற்காகவும், சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவம் அவர்களுக்கு உடந்தையாக இருந்து செயல்பட்ட குற்றத்திற்காகவும் வ. உ. சி. அவர்களுக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் இத்தண்டனை ஆறாண்டுக் காலமாகக் குறைக்கப்பட்டது. ஈண்டு, நீதிபதி பின்ஹே அளித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்த செய்தி கவனத்தில் கொள்ள வேண்டியது:

> ***"பிள்ளை பெரிய ராஜத் துரோகி; அவரது எலும்புக்கூடு கூட ராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. பிள்ளையின் பேச்சையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்" (பின்ஹே நீதிபதியின் தீர்ப்பிலிருந்து; பாலசுப்ரமணியன்).***

இச்செய்தி வ.உ.சி. அவர்களின் தேசப்பணியைப் பறைசாற்றும் ஆவணம் என்பதும், விடுதலைக் கிளர்ச்சிக்கு வ.உ.சி. மற்றும் பாரதியாரின் வீறாற்றல் சார்ந்த செயல்பாடுகள் நல்வித்தாக அமைந்திருந்தன என்பதும் புலப்படுகிறது.

வ.உ.சி அவர்கள் சிறைவாசத்தில் சிந்தனைகளோடு வாசம் செய்து தமிழ்ப் பணியாற்றினார். மொழிபெயர்ப்பு, படைப்பு, உரை, பதிப்புப் பணி என்ற நான்கு நிலைகளில் தமிழுக்குத் தொண்டு செய்துள்ளார். ஜேம்ஸ் ஆலன் நூல்களின் மொழிபெயர்ப்பாளர் (சாந்திக்கு மார்க்கம், மனம் போல வாழ்வு, வலிமைக்கு மார்க்கம்), பாடல் திரட்டு, மெய்யுணர்வு, மெய்யறம், வள்ளியம்மை சரித்திரம் ஆகிய நூல்களின் படைப்பாசிரியர், சிவஞானபோதத்திற்கான உரையாசிரியர், தொல்காப்பிய இளம்பூரணம், திருக்குறள் மனக்குடவர் உரை (அறத்துப்பால் மட்டும்), இன்னிலை உரை ஆகியவற்றின் பதிப்பாசிரியர் எனப் பணியாற்றியதோடு 'விவேக பாநு' என்ற இதழின் ஆசிரியராகவும் கட்டுரை ஆசிரியராகவும் செயல்பட்டவர் (ஆதித்தன்).

5. 'அகமே புறம்' – பதிப்பும் பார்வையும்

இராஜ நிந்தனைக் குற்றத்திற்காக ஆறு வருடம் நாடு கடத்தல் தீர்ப்பை ஏற்று கோயம்புத்தூர் சிறை வீட்டில் வாழ்ந்திருந்த காலத்தில் இந்நூல் உருவாக்கம் பெற்றது என வ.உ.சி. அவர்களே தம் முதல் பதிப்பின் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார் (சிதம்பரம் பிள்ளை). ஜேம்ஸ் ஆலனின் "Out from the Heart" என்ற நூலின் மொழிபெயர்ப்பாக 'அகத்திலிருந்து புறம்' என்ற பொருண்மையில் சுப்பிரமணிய சிவம் நடத்திய ஞானபாநு இதழில் 'அகமும் வாழ்வும்' – ஆகஸ்ட் 1913, 'மனதின் தன்மையும் வன்மையும்' – செப்டம்பர் 1913, 'சுபாவத்தை ஏற்படுத்துதல்' – அக்டோபர் 1913 ஆகிய மாதங்களில் கட்டுரைகளாக வெளிவந்தது. பின்னரே இன்னும் சில பகுதிகளாகச் சேர்க்கப்பட்டு 1914 இல் புத்தகமாக வெளிவந்துள்ளது (Allen; சிதம்பரம் பிள்ளை). கீழுள்ள படம் 1, இந்நூலின் பதிப்பு வரலாற்றைத் தொகுத்துக் காட்டுகின்றது.

படம் 1: 'அகமே புறம்' நூலின் பதிப்பு வரலாறு

ஆண்டு	நிகழ்வு	பதிப்பு விவரம்
1913	'ஞானபாநு' இதழில் 'அகமும் வாழ்வும்' (ஆகஸ்ட்), 'மனதின் தன்மையும் வன்மையும்' (செப்டம்பர்), 'சுபாவத்தை ஏற்படுத்துதல்' (அக்டோபர்) என்னும் கட்டுரைத் தொடர்	இதழ் வெளியீடு
1914	தொடர்க் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலாக முதன்முதலில் வெளியீடு	முதற் பதிப்பு
1916	சென்னை, ப்ரோக்ராஸ் பிரஸ் வெளியீடு	இரண்டாம் பதிப்பு
1928	அம்பாசமுத்திரம், அகஸ்தியர் பிரஸ் வெளியீடு	மூன்றாம் பதிப்பு
1966	பாரி நிலையம், சென்னை வெளியீடு (பாயிரங்கள் நீக்கப்பட்டு)	ஆறாம் பதிப்பு

1916இல் சென்னை, ப்ரோக்ராஸ் பிரஸ் மூலம் இரண்டாம் பதிப்பும், 1928இல் அம்பாசமுத்திரம் அகஸ்தியர் பிரஸ் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தன. இவ்விரண்டிலும் முதனூற்செய்யுள், முதனூற் பாயிரம், முதல்நூலின் சிறப்புப் பாயிரம், முதல் பதிப்பின் பாயிரம், இரண்டாம் பதிப்பின் பாயிரம், ஜேம்ஸ் ஆலனின் சரித்திரச் சுருக்கம், காப்பு ஆகியன இடம் பெற்றுள்ளன (சிதம்பரம் பிள்ளை).

தொடர்ந்து 1966இல் ஆறாம் பதிப்பாக பாரி நிலையம் வெளியிட்ட பதிப்பில் முதல் நூலின் சிறப்பு பாயிரம், முதல் பதிப்பின் பாயிரம், இரண்டாம் பதிப்பின் பாயிரம், ஜேம்ஸ் ஆலனின் சரித்திரச் சுருக்கம் ஆகியன நீக்கப்பட்டுள்ளன (சிதம்பரம் பிள்ளை).

வரலாற்றைப் பிரதிபலிக்கும் நூல்கள் அடுத்தடுத்த பதிப்புகளின் போது என்ன காரணத்தினாலோ பதிப்புரை, முகவுரை முதலான சிறப்பு பகுதிகள் நீக்கப்படுகின்றன. எனவே நூல் பற்றியோ நூலாசிரியர் பற்றியோ அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்றுச் செய்திகள் அறியப்படாமலே போகின்றன.

அகமும் புறமும், மனத்தின் தன்மையும் வன்மையும், பழக்கத்தை உண்டாக்கல், செய்தலும் அறிதலும், உயர்தர வாழ்வு, மனோநிலைகளும் அவற்றின் காரியங்களும் ஆகிய தலைப்புகளை உள்ளடக்கிய இந்நூல் கலாசாலைகளில் ஒழுக்கப் பாடப் புத்தகமாக இடம் பெற வேண்டியது என ப.வே. நரசிம்ஹ அய்யாரவர்கள் குறிப்பிடுகின்றார். "என்னுடைய இயற்றியதற்காக ஸ்ரீமாந் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களுக்குத் தமிழ் உலகம் மிகவும் கடன்பட்டுள்ளது; இதனை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கற்றுணர வேண்டியது ஆவசியகம்" என தென் இந்தியா மெயில் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது (சிதம்பரம் பிள்ளை).

6. அறமும் அறிவும்

அறம், அறிவு இரண்டும் எளிதில் ஒன்றுவதில்லை. அங்ஙனம் அறிவு, அறத்தைக் காப்பதாக இருப்பின் அதுவே போற்றத்தக்கது.

"அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன்நோய்போல் போற்றாக் கடை"
(வள்ளுவர்).

என்று வள்ளுவரும் அறிவின் அறத்தை எடுத்துரைக்கின்றார். வ.உ. சி. தம்முடைய 'அகமே புறம்' நூலில் கீழ்க்காணும் செய்யுளைக் குறிப்பிடுகின்றார்:

"அறத்தைக் காணா அறிவே மரமாம் அறத்தைப் பிழைத்து அறிவே மிருகம்
அறத்தைப் புரியும் அறிவே மனிதன் அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்"
(சிதம்பரம் பிள்ளை).

அறன் வலியுறுத்தல், அறம் பாடுதல், அறம் பிழைத்தல், அறமே விழுத்துணை, இல்லறம், துறவறம், அறமே கூற்றாகும் முதலான அறம் சார்ந்த சொற்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பத்தே சொற்களால் வ.உ.சி. அறத்தையும் அறிவையும் தொடர்புபடுத்தி உள்ளமை எண்ணி வியக்கத்தக்கது; ஏற்புடையது. மிக எளிமையான சொற்களால் அறத்தைக் காக்கும் அறிவு தான் கடவுள் என வலியுறுத்துகின்றார். திருவள்ளுவரும் அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் வருத்தி அழிக்கும் என்கிறார் (வள்ளுவர்). அன்பே சிவமாகும் என்பது திருமந்திரத்தின் கருத்தாகும் (திருமூலர்).

7. அகத்தாய்வும் ஒழுக்கமும்

"தன்னை அறிய தனக்கு ஒருகேடு இல்லை தன்னை அறியாமல் தானே கெடுகின்றான் தன்னை அறியும் அறிவு அறிந்தபின் தன்னை அர்ச்சிக்கத் தான் இருந்தானே" (திருமூலர்).

என்ற திருமந்திரத்தின் படி அகத்தாய்வு செய்தலையும் அகநோக்கலையும் வ.உ.சி குறிப்பிட்டுள்ளார். புறம் சிறக்க அகம் தெளிவாகவும் சீராகவும் இருக்க வேண்டும். தீதிலா மனம், தீதிலா அறிவு, ஒழுங்குபடுத்தப்பட்ட பழக்கங்கள் ஆகிய இவைதான் அகமும் புறமும் சிறக்கத் தேவைப்படும் என்று தன்நூலில் பதிவு செய்துள்ள வ.உ.சி., எளிமையான உணர்வுடைச் சொற்களால் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் (சிதம்பரம் பிள்ளை).

ஒழுக்கம் ஒன்றே மெய் உணர்விற்கும் மற்றைய சகல உயர்ந்த பதவிகளுக்கும் மார்க்கம் என்பது ஆலனுடைய சித்தாந்தம் (Allen). அதை வ.உ. சி. வழிமொழிந்து சொல்வதோடு:

"மனம் தளர்ச்சியின்றி வாழ்க்கை நிலைமையாகிய வத்திரத்தை நெய்து கொண்டிருக்கிறது. நினைப்பு நூல்; நல்ல செயல்களும் தீய செயல்களும் பாவும் ஊடும்; ஒழுக்கம் வாழ்வதாகிய தறியில் நெய்யப்படும் வத்திரம். மனம் தான் நெய்த வத்திரத்தால் தன்னை உடுத்திக் கொள்கிறது" (சிதம்பரம் பிள்ளை).

என்று ஒழுக்க ஆடையை மனம் அணிந்து கொண்டால்தான் அகம் சிறக்கும் என நம்மை ஆற்றுப்படுத்துகின்றார். அவ் ஒழுக்கமே உயிரினும் போற்றத்தக்கது.

8. உயர்தர வாழ்வு: முரணும் தீர்வும்

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்றாற்போலே நூல்களைப் படித்தால் மட்டும் ஒழுக்கம் வந்துவிடுமா? வராது.

"உயர்தர வாழ்வு நூல்களை வாசிப்பதிலும் தெய்வத்தையும் மனத்தையும் பற்றி வழங்கும் உரைகளை பேசுவதிலும் அடங்கி இருக்கிறது என்றும், இந்த

மார்க்கத்தால் ஆன்ம தத்துவங்களை அறியக்கூடும் என்றும் கருதுதல் சாதாரணமாகக் காணப்படும் ஒரு பிழை" (சிதம்பரம் பிள்ளை).

அதற்குத் தீர்வு தான் என்ன? என வினவும்போது:

"ஒழுக்கத்தை அநுஷ்டிப்பதாலேயே ஒழுக்கத்தை அறியக்கூடும். ஒழுக்கத்தை கைக்கொண்ட பொழுது அவன் மனம் மெய்ஞ்ஞானத்தில் விரிவுறுகின்றது. அம்மெய்ஞ்ஞானமே அவன் ஷேமமாக அமரத்தக்க நிலை" (சிதம்பரம் பிள்ளை).

என்று உறுதிபடக் கூறுகின்றார்.

9. தள்ள வேண்டிய ஒழுக்கங்கள்

ஒழுகுதலே (கடைப்பிடித்தல்) ஒழுக்கம். அது நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இருவகைப்பட்ட தன்மை உடையது. கொடியவர் (அ) தீயவர் அவரும் தமக்குரிய தீய ஒழுக்கத்தைத் தொடர்ந்து பின்பற்றுகிறவர் ஆவர். எனினும் நல்லொழுக்கப் பண்பே நம்மை உயர்த்தும்.

வ.உ.சி. தள்ள வேண்டிய ஒழுக்கங்களாகச் சரீர ஒழுக்கத்தையும் நா ஒழுக்கத்தையும் குறிப்பிடுகின்றார் (சிதம்பரம் பிள்ளை). சோம்பல், மீதூண் (அதிகமாக உண்ணுதல்) ஆகியன சரீரத்திற்குரிய தீய ஒழுக்கங்களாம். தற்போது சுழற்சி முறை பணி, போலியான பகட்டு நாகரிகம் முதலான காரணங்களால் இவ்விரண்டு சரீர ஒழுக்கங்களும் நெறிப்படுத்தப்படுவதில்லை.

புறங்கூறல், பயனிலை சொல்லாமை, நிந்தித்தல் (பழி பேசுதல்), புன்மொழி பகறல் (வன் சொற்களைப் பேசுதல்), குதர்க்கம் பேசுதல் (வீண் விவாதம்) முதலான நாவிற்குரிய தீய ஒழுக்கங்களைக் கைவிடுதல் வேண்டும். எனவே வ. உ.சி.யின் இக்கருத்தினைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

10. மனோநிலைகளும் செயல்பாடுகளும்

ஒருவரின் செயல்பாடு அவரின் மனநிலையைப் பொறுத்து அமைகின்றது. நிஷ்காமிய கருமம், அசையாத நடுநிலைமை, அசைவற்ற பொறுமை போன்ற நல்லொழுக்கங்களை ஒழுகுதல் வேண்டும். சிறப்பு மனோநிலைகளும் அவற்றிற்கான செயல்பாடுகளும் பற்றி வ.உ.சி. குறிப்பிட்டுள்ளதை அட்டவணைப்படுத்தி ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் கண்முன்னே காணும்படியாக வைத்தல் உயர்தர வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம் (சிதம்பரம் பிள்ளை). கீழுள்ள படம் 2, இக்கருத்துக்களைத் தொகுத்துக் காட்டுகின்றது.

படம் 2: சரியான மனோநிலைகளும் அவற்றின் செயல்பாடுகளும்

சரியான மனோநிலைகள்	அவற்றின் செயல்பாடுகள்
அன்பு	இனிமையான நிலைகள், பேரின்பம்
தூய்மை	புத்தி, தெளிவு, ஆனந்தம், அசையாத நம்பிக்கை
சுயநலமின்மை	தைரியம், திருப்தி, சந்தோசம், ஆக்கம்
அடக்கம்	அமைதி, மௌனம், மெய்ஞானம்
சாந்தம்	சமாதானம், சகல சந்தர்ப்பத்திலும் திருப்தி உடைமை
இரக்கம்	காக்கப்படுதல், நேசிக்கப்படுதல், மதிக்கப்படுதல்
நல்லெண்ணம்	சந்தோசம், வெற்றி
தன்னை அடக்கல்	மனோசாந்தி, சரியான புத்தி, ஆரோக்கியம், கௌரவம்
பொறுமை	மனோ வலிமை, அதிக செல்வாக்கு
தன்னை அறிதல்	அறிவு, ஞானம், அகப்பார்வை நிலை, சமாதானம்

11. வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புத் திறன்

'அகமே புறம்' நூலின் முதற்பதிப்பின் சிறப்புப் பாயிரத்தில் சுவாமி வனஜாநந்தர்:

"இதன் முதல் நூல் அகத்திலிருந்து புறம் என்று பொருள்படும் பெயரைக் கொண்டிருப்பினும் நமது தமிழ் வழக்கிற்கு ஒத்தவாறு இதற்கு அகமே புறம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனை நம்மவர் விருப்போடு கொள்ளுமாறு இதன் முதல் நூலாசிரியரின் கருத்துக்கிணங்கிய தமிழ் நூலாசிரியர்களின் முதுமொழிகள் சில இதில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன" (சிதம்பரம் பிள்ளை).

என்று குறிப்பிடுகின்றார்.

மொழிபெயர்ப்பு என்பது எம்மொழிக்கு மொழிபெயர்க்கின்றோமோ அம்மொழி மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் இருத்தல் வேண்டும். அவ்வாறு வ.உ.சி.யும் தமிழ் மக்கள், குறிப்பாக மாணவர்கள், எளிதில் புரிந்து கொள்ளவும் பின்பற்றத்தக்க வகையிலும் எடுத்து உணர்த்தியுள்ளார். இவ்விடத்து:

"மக்கள் வழக்கில் பயன்படுத்தும் சொற்களையே பயன்படுத்த வேண்டும். அவையே அவர்களின் புரிதலுக்கு மிகவும் பயனுடையதாக அமையும் என்ற எண்ணம் உடையவராகவும் இருந்தார் வ.உ.சி." (ஆதித்தன்).

என்ற முனைவர் த.ஆதித்தன் அவர்களின் கருத்தும் ஏற்கத்தக்கது. இவரின் மொழிபெயர்ப்புத் திறனை இன்னும் உணர்ந்து கொள்ள இந்நூலைக் கற்றலே நன்றாகும் (இலட்சுமணன்).

12. முடிவுரை

இக்கட்டுரை கீழ்க்காணும் முடிவுகளைத் தருகின்றது:

- வ.உ.சி.யின் அகமே அவரது புறச்செயல்பாடுகளுக்குக் காரணமாகையால் இந்நூலின் சிறந்த சான்றாக அவரே திகழ்கின்றார்.
- திருக்குறள், நாலடியார், திருமந்திரம் ஆகிய இலக்கிய மேற்கோள்களைப் பெயர் சுட்டாமல் ஆன்றோர்கள் வாக்கு என்று ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார் வ.உ.சி.
- மனம் எவ்வொழுக்காமாயினும் அதனைப் பற்றிக்கொள்ளும்.
- ஒரு மனிதர் தொடர் பயிற்சியினால் நல்வினையில் தேர்ச்சி அடைதல் முடியும்.
- நற்செயல்பாடுகளைச் சீரமைக்கும் நல்ல மனோநிலையைப் பெறுதல் வேண்டும்.
- புத்தகப் பதிப்புகளில் எந்தப் பகுதியும் நீக்கப்படாமல் தொடர்ந்து பதிப்பிக்கப்படுவதைப் பதிப்பு அறமாகக் கொள்ள வேண்டும்.

KALANJIYAM

துணை நின்ற நூல்கள் (Works Cited – MLA)

[1]. சிதம்பரம் பிள்ளை, வ.உ. அகமே புறம். இரண்டாம் பதிப்பு, ப்ரோக்ராஸ் பிரஸ், 1916.

[2]. ---. அகமே புறம். மூன்றாம் பதிப்பு, அகஸ்தியர் பிரஸ், அம்பாசமுத்திரம், 1928.

[3]. ---. அகமே புறம். ஆறாம் பதிப்பு, பாரி நிலையம், சென்னை, 1966.

[4]. பாலசுப்ரமணியன், சி., முனைவர். செக்கிழுத்தச் செம்மல் சிதம்பரனார். சான்றோர் தமிழ் வெளியீடு, பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[5]. பரிமேலழகர். திருக்குறள் – பரிமேலழகர் உரை. வெளியீட்டாளர் குறிப்பிடப்படவில்லை, பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[6]. ஆதித்தன், த., முனைவர். வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புகளும் உரைகளும். வெளியீட்டாளர் குறிப்பிடப்படவில்லை, பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[7]. இலட்சுமணன், சி.கி., பேராசிரியர். தமிழ் இலக்கிய வரலாறு. வெளியீட்டாளர் குறிப்பிடப்படவில்லை, பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[8]. திருமூலர். திருமந்திரம். பாரம்பரியச் சைவசித்தாந்த நூல், பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[9]. வள்ளுவர், திரு. திருக்குறள். பாரம்பரிய நீதி நூல், பதிப்பாண்டு குறிப்பிடப்படவில்லை.

[10]. Allen, James. Out from the Heart. James Allen Publications, 1904.

ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

KALANJIYAM